ஆசிரியரிடமிருந்து........!



# வல்லமை நிறைந்த கிறிஸ்தவ வாழ்வு

கிறிஸ்துவுக்குள் பிரியமான வாசகர்களுக்கு இயேசுவின் வல்லமையுள்ள நாமத்தில் வாழ்த்துக்கள்!

நமது ஆண்டவராகிய இயேசு இந்த பூமியில் இருந்தபோது அவருடைய வாழ்வு வல்லமை நிறைந்ததாய் இருந்தது. இயேசுவில் இருந்த வல்லமையைப் பற்றி கூறும் சில வசனங்களை லூக்கா சுவிசேஷத்தில் காண முடியும். "பின்பு இயேசு ஆவியானவருடைய **வல்லமையினாலே** கலிலேயாவுக்கு திரும்பி போனார். அவருடைய கீர்த்தி சுற்றிலும் இருக்கிற தேசமெங்கும் பரம்பிற்று' (லூக்கா 4:14). "எல்லாரும் ஆச்சரியப்பட்டு இது என்ன வார்த்தையோ! அதிகாரத்தோடும் **வல்லமையோடும்** அசுத்த ஆவிகளுக்குக் கட்டளையிடுகிறார், அவைகள் புறப்பட்டுப் போகிறதே என்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள்" (லூக்கா 4:36). "பின்பு ஒரு நாள் அவர் உபதேசித்துக் கொண்டிருந்தபோது பிணியாளிகளை குணமாக்கத்தக்கக் கர்த்தருடைய **வல்லமை** விளங்கிற்று" (லூக்கா 5:17). "அவரிடத்திலிருந்து **வல்லமை** புறப்பட்டு எல்லாரையும் குணமாக்கினபடியினாலே, ஜனங்கள் யாவரும் அவரைத் தொடும்படி வகைத்தேடினார்கள்" (லூக்கா 6:19; 8:46).

இந்த வல்லமை இயேசுவுடனே முடிந்துவிடவில்லை. இயேசுவின் சீடர்கள் இதே வல்லமையுடன் வாழ்ந்தனர் (லூக்கா 9:1;10:19; ரோமர் 15:18; 1கொரி.2:5). ஸ்தேவான் விசுவாசத்தினாலும் வல்லமையினாலும் நிறைந்தவனாய் இருந்தான் என்று வேதம் கூறுகிறது(அப்.6:8). வல்லமையற்ற நிலையை உதறி தள்ளுவதே கிறிஸ்தவ வாழ்வின் அழைப்பாகும் (2தீமோ.3:5). இயேசு தேவ வல்லமையால் நிறைந்தவராய் வாழ்ந்தது போல நாமும் அதேவல்லமையால் நிரப்பப்பட வேண்டும் (2கொரி.13:4). அவரை விசுவாசிக்கிற நமக்கு அவருடைய அளவிடமுடியாத தேவத்துவத்தின் வல்லமையை அருளும்படியாகவே கர்த்தர் விரும்புகிறார் (எபே.1:19,20). ஏனெனில் "தேவனுடைய இராஜ்யம் பேச்சிலே அல்ல; மாறாக அது தேவவல்லமையால் நிறைந்து வாழ்வதில் இருக்கிறது" (1கொரி.4:20). வல்லமை நிறைந்த கிறிஸ்தவ வாழ்வு வாழ வேதம் கூறும் வழிகளை சுருக்கமாக கீழே காண்போம்.

## 1. வேத வார்த்தை மூலம் வல்லமை (SCRIPTURES)

தேவனுடைய வல்லமை நிறைந்த களஞ்சியம் அவருடைய வார்த்தைகளடங்கிய பரிசுத்த வேதாகமம் ஆகும். தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளது (எபி.4:12). ஊட்டச்சத்து மிக்க உணவை உண்ணும்போது எப்படி உடல் வலிமை பெறுகிறதோ, அதே போல தேவனுடைய வார்த்தையை வாசித்து, தியானித்து,

உட்கொள்ளும்போது நமது ஆவிக்குரிய வாழ்வு வல்லமை பெறுகிறது. தேவனுடைய வார்த்தை நம்மை பரிசுத்தமாக்க வல்லமையுள்ளது (சங்.119:9,11; எபே.5:25,26), விசுவாசத்தை பெருகச் செய்ய வல்லமையுள்ளது (ரோமர் 10:17). அது நம்மை ஞானவான்களாய் மாற்றவும் (சங்.19:7;119:130), சமாதானத்தை அருளவும் (சங்.119:165), மகிழ்ச்சியைத் தரவும் வல்லமையுள்ளது (எரே.15:16). தேவ வல்லமை நிறைந்த கிறிஸ்தவ வாழ்வையும், ஊழியத்தையும் விரும்பும் ஒவ்வொருவரும் தேவ வார்த்தையை இடைவிடாது உட்கொள்ள வேண்டும் (மத்.4:4) மற்றும் அதற்கு கீழ்ப்படிய அர்ப்பணிக்க வேண்டும் (யாக்.1:22).

## 2. ஜெபத்தின் மூலம் வல்லமை (SUPPLICATION)

நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் வல்லமையுடையது (யாக்.5:16). ஜெபம் ஆற்றல் மிக்க வல்லமையான ஆயுதம். நீங்கள் விண்ணப்பம் பண்ணாமலிருக்கிறதினாலே உங்களுக்கு சித்திக்கிறதில்லை (யாக்.4:2) என்ற யாக்கோபின் வார்த்தைகள் வல்லமையற்ற பரிதாபத்திற்குரிய வாழ்க்கை வாழும் ஒரு சராசரி கிறிஸ்தவனைப் பற்றி விவரிக்கிறது. சீஷர்கள் இயேசுவினிடத்தில் வந்து, 'ஏன் எங்களால் பிசாசை துரத்திவிடக்கூடாமற்போயிற்று என்று கேட்டதற்கு, ஜெபத்தினாலும், உபவாசத்தினாலுமேயன்றி இவ்வகை பிசாசு புறப்பட்டு போகாது' என்றார் (மாற்கு 9:28,29). ஜெபமும் உபவாசமும் நம் வாழ்வின் பழக்கமாக மாறும்போது நம்வாழ்வில் நிச்சயம் வல்லமை வெளிப்படும் (அப்.3:1-5). இயேசு இந்த உலகில் வாழ்ந்த நாட்களில் பிதாவோடு ஜெபத்தில் அதிக நேரம் செலவிட்டார். நாமும் இடைவிடாமல் ஜெபிக்க வேண்டும், சோர்ந்து போகாமல் ஜெபிக்க வேண்டும், விழித்திருந்து ஜெபிக்க வேண்டும் என்று கற்றுக் கொடுத்தார் (லூக்கா 18:1; 21:36; 11:1-13). ஒழுங்கும் கிரமமுமாக ஜெபிக்க தீர்மானிப்போம். புதுபெலன் பெற்று கர்த்தருக்காக பிரகாசிப்போம் (தானி.6:10; ஏசாயா 41:31). "அதிக ஜெபம்-அதிக வல்லமை; குறைந்த ஜெபம்-குறைந்த வல்லமை; ஜெபமின்மை-வல்லமையின்மை" ("More Prayer-More Power; Less Prayer-Less Power; No Prayer-No Power") என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மையான கூற்று அல்லவா?

## 3. துதியின் மூலம் வல்லமை (SINGING PRAISES)

பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார்கள். சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அதிர்ந்தது. கதவுகளெல்லாம் திறவுண்டது. கட்டுகள் கழன்று போயிற்று (அப்.16:25,26). துதிக்கும் இடத்தில் தேவன் வாசம்பண்ணுகிறார் (சங். 22:3). அங்கு அற்புதங்கள் நடக்கும் (அப்.16:26), மகிழ்ச்சி உண்டாகும் (சங்.16:11), தடைகள் விலகும் (யோசுவா 6:20), சத்துரு முறியடிக்கப்படுவான் (2 நாளா.20:22). தாவீதைப் போல கர்த்தரை எக்காலத்திலும் துதிக்கபழகுவோம் (சங்.34:1). அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்துவோம் (எபி.13:15). எக்காலத்திலும், எப்போதும், எல்லாவற்றிலேயும் துதிக்கும் ஒரு மனிதனை தேவன் தம்முடைய பிரசன்னத்தினாலும் வல்லமையாலும் நிரப்புவார்!

## 4. பரிசுத்த ஆவியானவர் மூலம் வல்லமை (SPIRIT OF GOD)

பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலன் (வல்லமை) அடைவீர்கள் என்று இயேசு கூறினார் (அப்.1:8). இரட்சிக்கப்பட்ட ஒவ்வொருவரும்

பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையும் நிறைவையும் பெற்றுக்கொள்ள வேண்டும் (எபே.5:18). பரிசுத்த ஆவியானவரின் நிறைவைப் பெற்ற கிறிஸ்தவர்கள்தான் வல்லமையான சாட்சிகளாக மாற முடியும். பரிசுத்த ஆவியானவர் பாவத்தின் மேல் வெற்றி பெற நமக்கு உதவி செய்கிறார் (கலா.5:16).ஆவியின் கனிகளை நமக்குள் உருவாக்கி இயேசுவை உலகத்திற்கு பிரதிபலிக்க நமக்கு உதவி செய்கிறார் (கலா.5:22,23). மேலும் நற்செய்தி அறிவிக்க அசாதாரண தைரியத்தையும் வரங்களையும் அருளுகிறார் (அப்.4:31; ரோமர் 1: 16; 1 கொரி. 12:7-11). பாவம், பிசாசு, வியாதியினால் கட்டுண்டோரை விடுவிக்க ஆவியானவர் நமக்கு வல்லமையையும் அதிகாரத்தையும் அருளுகிறார் (லூக்கா 4:18; அப்.10:38)! சுவிசேஷம் அறிவிக்க புறப்பட்டுப் போங்கள். கர்த்தர் உங்களை கொண்டு பலத்த, வல்லமையான கிரியைகளை நடப்பிப்பார். உங்கள் கண்கள் காணும். நீங்கள் தேவனை மகிமைப் படுத்துவீர்கள் (மாற்கு 16:20; ரோமர் 15:18).

## 5. பாடுகள் மூலம் வல்லமை (SUFFERING)

கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக் குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மை பாராட்டுவேன் என்று பவுல் கூறுகிறார் (2 கொரி.12:9). கிறிஸ்துவுக்காக பாடுகள் சகிக்க ஆயத்தமாக இல்லாத பட்சத்தில் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையை நாம் அநுபவிக்க முடியாது (பிலி.3:10). கிறிஸ்துவினிமித்தம் வரும் துன்பங்கள், நெருக்கங்கள், நிந்தைகளை நாம் சந்தோஷமாக ஏற்றுக்கொள்ளும்போது, தேவவல்லமை நம் வாழ்வில் வெளிப்படுவதை நாம் காண முடியும் (2 கொரி.12:10; 6:4-10; தானி.3:25-38; 6:22-26)!

## 6. ஒப்புக்கொடுத்தல் மூலம் வல்லமை (SURRENDERED LIFE)

உங்களைத் தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள் (ரோமர் 6:13). வல்லமை நிறைந்த வாழ்வு பெறுவதற்கான மாபெரும் மற்றும் முக்கியமான இரகசியம் தேவனிடத்தில் சரணடைதல் அல்லது ஒப்புக்கொடுத்தல் ஆகும். ஒப்புக்கொடுத்தல் என்பது 'ஒருவரிடம் தன்னை முழுமையாக விட்டுக்கொடுத்தல்' என்று பொருள்படும். நாம் நம்மைத் தேவனுக்கு முழுமையாக விட்டுக்கொடுக்க வேண்டும். அதாவது நம்மை தேவனுக்கு உரிமையான சொத்தாகவும், அவர் தம் விருப்பப்படி நமக்குச் செய்யவும், நம்மை உபயோகிக்கவும் முற்றிலும் அர்ப்பணிக்க வேண்டும். 'இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை; உம்முடைய வார்த்தையின்படியே எனக்கு ஆகக்கடவது (லூக்கா 1:38) என்று தன்னை ஒப்புக்கொடுத்த மரியாளை எல்லா சந்ததிகளும் அவளை பாக்கியவதி என்று சொல்லத்தக்க ஆசீர்வதித்து பயன்படுத்தினார். பவுல், ஸ்தேவான், பேதுரு போன்ற தேவ மனிதர்களின் நூறு சதவீத ஒப்புக்கொடுத்தல் தேவனுடைய கரத்தில் அவர்களை வல்லமையான கருவிகளாக மாற்றியது (அப்.5:29; 6:8; 9:6). நாமும் தேவசித்தம் செய்ய தேவ கரத்தில் நூற்றுக்கு நூறு முழுமையாக ஒப்புக்கொடுப்போம்! தேவ வல்லமையோடு வாழுவோம்! ஆமென்!

**Rev. Dr. ஜெரி டேனியல்**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்)
மூத்த போதகர், சிட்டி ரிவைவல் ஏ.ஜி. சர்ச், திருச்சி